02.08.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### ஆக. 5-இல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

திருப்பூர் கோட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர் கூட்டம் ஆகஸ்ட் 5-ஆம் தேதி நடைபெறவுள்ளது.

திருப்பூர் கோட்ட அளவிலான விவசாயிகள் குறைதீர் கூட்டம் மாதந்தோறும் நடத்தப்பட்டு வருகிறது. இதில், விவசாயிகளின் குறைகள் கேட்கப்பட்டு அதற்கு உரிய தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில், நடப்பு மாதத்துக்கான விவசாயிகள் குறைதீர் கூட்டம் ஆகஸ்ட் 5-ஆம் தேதி நடைபெறவுள்ளது. இதில், திருப்பூர் வடக்கு, தெற்கு, அவிநாசி, பல்லடம், ஊத்துக்குளி வட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் பங்கேற்று தங்களது குறைகளைத் தெரிவிக்கலாம் என கோட்டாட்சியர் முருகேசன் தெரிவித்துள்ளார்.

### 19-ஆம் தேதி விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம்

நீலகிரி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் உதகையில் ஆகஸ்ட் 19-ஆம் தேதி நடைபெறவுள்ளது.

இதுதொடர்பாக, நீலகிரி மாவட்டத் தோட்டக்கலைத் துறை இணை இயக்குநர் என்.மணி தெரிவித்துள்ளதாவது:

நீலகிரி மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் உதகையில் ஆகஸ்ட் 19-ஆம் தேதி மாவட்ட ஆட்சியர் பி.சங்கர் தலைமையில் நடைபெறுகிறது. எனவே, நீலகிரி மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் தங்களது விவசாயம் தொடர்பான குறைகள் ஏதேனும் இருப்பின் அவற்றை தோட்டக்கலை இணை இயக்குநர், தபால் பெட்டி எண்: 72, உதகை-1 என்ற அலுவலக முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபாலிலோ அனுப்பி வைக்கலாம் என தெரிவித்துள்ளார்.

**பரமத்திவேலூர் ஏலச் சந்தையில் பூக்கள் விலை உயர்வு**

பரமத்திவேலூர் ஏலச் சந்தையில் திங்கள்கிழமை நடைபெற்ற ஏலத்தின்போது பூக்கள் அதிக விலைக்கு விற்பனையானது. இதனால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

பரமத்திவேலூர் வட்டத்தில் அண்ணாநகர், கபிலர்மலை, பரமத்தி, எல்லைமேடு, கரசப்பாளையம், செங்கப்பள்ளி, பெரிய சோழிபாளையம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் பூக்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. இங்கு விளையும் பூக்களை விவசாயிகள் பரமத்திவேலூரில் உள்ள பூக்கள் ஏலச் சந்தைக்குக் கொண்டு சென்று விற்கின்றனர். பரமத்தி வேலூர், ஜேடர்பாளையம், கபிலர்மலை, பரமத்தி, கரூர் மாவட்டம் வேலாயுதம்பாளையம் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த வியாபாரிகள் இங்கு ஏலம் எடுக்க வருகின்றனர். கடந்த வாரம் நடைபெற்ற ஏலத்தை விட நிகழ்வாரம் பூக்கள் அதிக விலைக்கு விற்பனையானது.

நிகழ்வாரம் திங்கள்கிழமை நடைபெற்ற ஏலத்தில் விற்பனையான பூக்களின் விலை நிலவரம், கிலோ அளவில் (அடைப்புக் குறிக்குள் கடந்த வார விலை நிலவரம்):

குண்டு மல்லி ரூ.400 (ரூ.250), சம்பங்கி ரூ.200 (ரூ.50), அரளி கிலோ ரூ.200 (ரூ.100), முல்லை ரூ.350 (ரூ.200), செவ்வந்திப்பூ ரூ.150 (ரூ.100), பட்டு ரோஜாப்பூ ரூ.150 (ரூ.100) என ஏலம் போனது.

ஆடிப்பெருக்கு, ஆடி அமாவாசை, குரு பெயர்ச்சி போன்ற விசேஷ நாள்கள் ஒன்றாக வருவதால் பூக்கள் அதிக விலைக்கு விற்பனையானதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

கொல்லிமலையில் வல்வில் ஓரி விழா தொடங்கியது: 29 வகையான மலர்களின் கண்காட்சி

வல்வில் ஓரி விழாவையொட்டி, கொல்லிமலை தாவரவியல் பூங்காவில் 29 வகையான மலர்களின் கண்காட்சி திங்கள்கிழமை நடைபெற்றது. பல்வேறு அலங்காரத்தில் பல வண்ண மலர்கள் வடிவமைக்கப்பட்டிருந்ததை பொதுமக்கள், சுற்றுலாப் பயணிகள் பார்த்து ரசித்தனர்.

நாமக்கல் மாவட்டம், கொல்லிமலையை ஆண்ட வல்வில் ஓரி மன்னன் நினைவாகவும், சுற்றுலா வளர்ச்சிக்காகவும் ஆண்டுதோறும் வல்வில் ஓரி விழா கொல்லிமலையில் நடைபெற்று வருகிறது.

நிகழாண்டு 2 நாள்கள் நடைபெறும் இவ் விழா திங்கள்கிழமை தொடங்கியது. தொடக்க நிகழ்ச்சியாக வல்வில் ஓரி சிலைக்கு, மாவட்ட வருவாய் அலுவலர் கு.பழனிச்சாமி மாலை அணிவித்தார்.

அதைத் தொடர்ந்து அரசு தாவரவியல் பூங்காவில் தோட்டக்கலைத் துறை சார்பில், மலர்க் கண்காட்சி நடைபெற்றது. இதில் அங்குள்ள கண்ணாடி அரங்கில் ரோஜா, கார்னேஷன், ஜெர்பரா, லில்லியம், பிளோடியோலஸ், அஷ்ட்ரோமேரியா, டைசி, கிளரசாந்திமம், ஆர்சிட்ஸ், அந்தோரியம் உள்பட 29 வகையான மலர்கள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தன.

மேலும், கார்னேசன், ஜெர்பேரா, கிளாடியோலஸ், ரோஜா மற்றும் அஸ்பராகாஸ் போன்ற 1,000 மலர்களைக் கொண்ட கொய்மலர் அலங்காரம் நுழைவு வாயிலில் வைக்கப்பட்டிருந்தது.

இதுதவிர, கார்னேசன், ரோஜா, அஸ்பரகாஸ் மலர்களைக் கொண்டு "அம்மா' உணவகம் மாதிரி அமைப்பு, 5,000 ரோஜா, கார்னேசன் மலர்களால் உருவாக்கப்பட்ட பனிக்கரடி, 5,500 மலர்களால் உருவாக்கப்பட்ட பென்குயின் போன்றவை வைக்கப்பட்டிருந்தன.

இதில் குதிரை உருவத்துக்காக 20 ஆயிரம் பூக்களும், காளான் உருவத்துக்காக 5,000 பூக்களும் பயன்படுத்தப்பட்டிருந்தன. கண்காட்சிக்காக பூக்கள் பெங்களூரில் இருந்து வரவழைக்கப்பட்டிருப்பதாகத் தோட்டக்கலைத் துறை அலுவலர்கள் தெரிவித்தனர்.

மேலும், காய்கறிகள் மூலம் வெள்ளைக் குதிரை, முதலை, கொக்கு, வாத்து, மீன், பென்குயின் உள்ளிட்ட உயிரினங்களின் மாதிரிகளும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இக் கண்காட்சியை மாவட்ட வருவாய் அலுவலர் கு.பழனிச்சாமி தொடக்கி வைத்தார்.

நிகழ்ச்சியில், சேந்தமங்கலம் தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் சி.சந்திரசேகரன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட அலுவலர் எஸ்.கவிதா, கோட்டாட்சியர் எம்.கண்ணன், பல்வேறு துறை அதிகாரிகள் உடனிருந்தனர். கண்காட்சியை பொதுமக்களும், சுற்றுலாப் பயணிகளும் பார்வையிட்டனர்.

சென்டிமென்ட்டை உடைத்த டி.ஆர்.ஓ.: கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக இருந்து வந்த அச்ச உணர்வுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் விதமாக வல்வில் ஓரி

சிலைக்கு மாவட்ட வருவாய் அலுவலர் கு.பழனிச்சாமி திங்கள்கிழமை மாலை அணிவித்தார்.

இதுகுறித்து அரசு அதிகாரிகள் சிலர் கூறியது: கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக ஆண்டுவிழாவின்போது செம்மேட்டிலுள்ள வல்வில் ஓரி சிலைக்கு மக்கள் பிரதிநிதிகள், அரசு உயரதிகாரிகள் அல்லாத ஊராட்சிப் பணியாளர் ஒருவரைக் கொண்டே மாலை அணிவிக்கப்பட்டு வந்தது. வல்வில்ஓரி சிலைக்கு மாலை அணிவித்தால் பதவி பறிபோகும் என்ற கருத்து நிலவுகிறது. இதற்கு சில உதாரணங்களும் மேற்கோள்காட்டப்படுகிறது. இதனால் மக்கள் பிரதிநிதிகள், அரசு உயரதிகாரிகள் வல்வில் ஓரி சிலைக்கு மாலை அணிவிப்பதில்லை.

ஆனால், நிகழாண்டு மாவட்ட வருவாய் அலுவலர் கு.பழனிச்சாமி, சிலைக்கு மாலை அணிவித்து அச்ச உணர்வை உடைத்தெறிந்தார் என்றனர். மாவட்ட வருவாய் அலுவலர் வல்வில் ஓரி சிலைக்கு மாலை அணிவித்தபோது, சிலையில் இருந்து சுமார் 50 அடி தொலைவில் சாலையின் மறுமுனையிலே அதிகாரிகள், மக்கள் பிரதிநிதிகள் நின்று கொண்டிருந்தனர்.

## தும்பிபாடி ஏரிக்கு 30 ஆண்டுகளுக்குப் பிறகு நீர்வரத்து தொடக்கம்: விவசாயிகள் மகிழ்ச்சி

ஓமலூர் அருகேயுள்ள தும்பிபாடி ஏரிக்கு 30 ஆண்டுகளுக்கு பிறகு தண்ணீர் வந்துள்ளது. இதனால், அப் பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

சேலம் மாவட்டம், ஓமலூர் அருகேயுள்ள தும்பிபாடியில் பெரிய ஏரி ஒன்று உள்ளது. சுமார் நூறு ஏக்கர் பரப்பு கொண்டுள்ள இந்த ஏரிக்கு எப்போதும் தண்ணீர் வந்தது கிடையாது. பலத்த மழை பெய்து ஊரெங்கும் வெள்ளம் சென்றாலும், இந்த ஏரி மட்டும் எப்போதும் தண்ணீரின்றி வறண்டே கிடக்கும். இதனால், இந்த ஏரியைச் சுற்றியுள்ள விவசாயிகளும் விவசாயம் செய்ய முடியாமல் கூலி வேலைக்குச் சென்று வருகின்றனர். மேலும், மழையை நம்பிய மேட்டு நில விவசாயத்தைச் செய்து வருகின்றனர்.

இந்த ஏரிக்கு தண்ணீர் வரும் கால்வாய்கள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டும், பல்வேறு இடங்களில் அடைக்கபட்டும் உள்ளதாலேயே மழை காலங்களில் பல்வேறு ஏரிகள்

நிரம்பினாலும், இந்த ஏரிக்கு மட்டும் தண்ணீர் வராது. இந்த நிலையில், கடந்த சில நாட்களாக காடையாம்பட்டி பகுதியில் பெய்த மழையால் இந்த ஏரிக்கு தண்ணீர் வந்துள்ளது. மழைநீர் ஏரியின் கால்வாசி பகுதிகளை நிரம்பியுள்ளதால், அந்த பகுதி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

சில மாதங்களுக்கு முன்பு, நூறு நாள் வேலை திட்டத்தில் இந்த ஏரியின் கால்வாய்கள் ஆங்காங்கே தூர் எடுத்து சரி செய்யப்பட்டதால், தற்போது பெய்த மழைநீர் வீணாகாமல் முழுக்க முழுக்க ஏரிக்கு வந்து நிரம்பியுள்ளது. கடந்த 30 ஆண்டுகளாக வறண்டே கிடந்த தும்பிபாடி ஏரியில் தண்ணீரை பார்த்ததும் அப் பகுதி விவசாயிகள் தண்ணீரை மலர் தூவி வரவேற்றனர்.

## 3 ஆண்டுகளில் ரூ.2.30 கோடி மானியத்தில் 67 விவசாயிகள் பயன்: சோலார் பம்பு அமைத்து விவசாயம் செய்ய ஆர்வம் காட்டும் விவசாயிகள்

எரிசக்தி மின்சாரத்துக்கு மாற்று, மொத்த தொகையில் 80%ம் மானியமாக வழங்கப்படுவதால் சூரியசக்தி மூலம் இயங்கக்கூடிய பம்புகளை அமைக்க ஆர்வம் காட்டி வருகின்றனர் திருச்சி மாவட்ட விவசாயிகள்.

சுற்றுச்சூழல் மாசுபடாதவகையிலும், கச்சா எண்ணெய் பயன்பாட்டைக் குறைக்கும் வகையிலும், மின் சேமிப்பு மற்றும் எரிபொருள் சிக்கனத்துக்கு உதவும் வகையிலும் திருச்சி மாவட்டத்தில் 2013-14-ம் ஆண்டு முதல் சோலார் பம்பு அமைக்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

மானியங்கள் எவ்வளவு: தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் தமிழக அரசு 50%,மத்திய அரசு 30% மானியத்தை வழங்குகிறது. மீதமுள்ள மொத்த விலையில் 20% தொகையை மட்டும் விவசாயிகள் செலுத்தினால் போதும். சோலார் பம்பு அமைக்க 200 ச.மீட்டர் அளவுக்கு நிழல்படாத திறந்தவெளி இடம் தேவைப்படும். ஆழ்துளைக் கிணறு பகுதியாக இருந்தால் 200 அடி ஆழத்துக்கு நீரும், திறந்தவெளிக் கிணறு என்றால் 100 அடி ஆழத்துக்கு நீர் வளமும் உள்ள இடங்களில் சோலார் பம்பு அமைத்துத் தருகிறோம்.

மாவட்டத்தில் இதுவரை 67 விவசாயிகளுக்கு ரூ. 2.30 கோடி மானியத்தில் சோலார் பம்புகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. இந்தாண்டு 23 சோலார் பம்புகள் அமைத்துத் தர ஒதுக்கீடு பெறப்பட்டு விவசாயிகளிடமிருந்து

விண்ணப்பங்கள் பெறப்படுகின்றன. நிகழாண்டில் விண்ணப்பித்தோரின் எண்ணிக்கை கடந்தாண்டைக் காட்டிலும் 20% அதிகமாகும்.

இதுவரை 5 குதிரைத்திறன் சக்தி கொண்ட சோலார் பம்புகள் அமைத்துக் கொடுக்கப்பட்ட நிலையில், நிகழாண்டில் 7.5, 10 குதிரைத்திறன் கொண்ட பம்புகள் அமைத்துத் தரவும் விண்ணப்பங்களைப் பெற்று வருகிறோம்.

5 ஆண்டுகளுக்குப் பராமரிப்பு பணியை மோட்டார் பொருத்திய நிறுவனம் மேற்கொள்வதால் விவசாயிகளுக்கு எந்தச் சிக்கலும் இல்லை என்று அண்மையில் நடைபெற்ற செய்தியாளர் பயணத்தில் தெரிவித்தார் ஆட்சியர் கே.எஸ். பழனிசாமி.

திருச்சி மாவட்டம், தெற்கு மகிழம்பாடி கிராமத்தில் சோலார் பம்பு அமைத்து பாசனம் செய்து வரும் விவசாயி ப. பலராமகிருஷ்ணன் கூறியது: பொது நிர்வாகப் படிப்பில் முதுநிலைப் பட்டம் பெற்ற நான் அடிப்படையில் விவசாயி. ஏற்கெனவே மின் மோட்டார், டீசல் என்ஜின் மூலம் சாகுபடி மேற்கொண்டு வந்தாலும், பல நேரங்களில் விவசாயத்தில் கடுமையான நஷ்டம் ஏற்பட்டது. தண்ணீர் பற்றாக்குறை, மின் தட்டுப்பாடு போன்ற காரணங்களால் பாதிப்பைச் சந்தித்தேன். இந்நிலையில் 5 குதிரைத்திறன் கொண்ட சோலார் பம்பு அமைத்துள்ள எனக்கு மின்சாரம்,டீசல் சிக்கனம் ஏற்பட்டது. தேவையானபோது தேவையான அளவு சூரியசக்தி மின்சாரம் பெற்று பாசனம் செய்து வருகிறேன்.

ரூ. 5.01 லட்சம் மதிப்புடைய சோலார் பம்பு அமைக்க, அரசு மானியம் ரூ. 3.84 லட்சம் வழங்கியது. மீதமுள்ள தொகையை நான் செலுத்தி இத்திட்டத்தின் மூலம் பயன் பெற்று வருகிறேன்.

சூரிய ஒளியைக்கொண்டு உற்பத்தியாகும் மின்சாரம் அப்படியே பயன்படுத்தப்படுகிறது. அதே நேரத்தில் மின்சாரத்தைச் சேமித்து வைத்து பின்னர் பயன்படுத்தும் வகையில் பேட்டரி போன்ற வசதிகள் இருந்தால், இரவு நேரத்திலும் பயன்படுத்த முடியும் என்றார் பலராமகிருஷ்ணன். இந்தப் பயணத்தில் வேளாண் இணை இயக்குநர் இரா. சந்திரசேகரன், வேளாண் பொறியியல்துறை செயற்பொறியாளர் முருகேசன், உதவிச் செயற்பொறியாளர் ராஜேந்திரன், ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்) சாந்தி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## தோவாளை சந்தையில் பூக்கள் விலை கடும் உயர்வு: 1 கிலோ பிச்சி ரூ. 450

ஆடி அமாவாசை மற்றும் குருப்பெயர்ச்சியை முன்னிட்டு, தோவாளை பூச்சந்தையில் பிச்சிப்பூ ஒரு கிலோ ரூ. 450-க்கு விற்பனை செய்யப்பட்டது.

செவ்வாய்க்கிழமை ஆடி அமாவாசை, ஆடிப்பெருக்கு, குருப்பெயர்ச்சி, ஆடிச்செவ்வாய் ஆகிய விசேஷ தினங்கள் ஒரே நாளில் வருகிறது. இதை முன்னிட்டு, தோவாளை பூச்சந்தையில் திங்கள்கிழமை காலையே பூ வியாபாரிகள் குவிந்தனர். இவர்கள் பூக்களை அதிக விலை கொடுத்து ஏலம் எடுத்தனர். கடந்த வாரம், ரூ. 200-க்கு விற்கப்பட்ட ஒரு கிலோ பிச்சிப்பூ, திங்கள்கிழமை ரூ. 450 ஆக உயர்ந்தது. இதேபோல், ரூ. 100-க்கு விற்கப்பட்ட மல்லிகைப் பூ, ரூ. 280-க்கும், ரூ. 80-க்கு விற்கப்பட்ட அரளிப்பூ, ரூ. 150-க்கும், ரூ. 40-க்கு விற்கப்பட்ட மரிக்கொழுந்து ரூ. 60-க்கும் விற்பனையானது.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

## கால்நடைகளுக்கு தடுப்பூசி முகாம்

தேனி: தேனி அருகே சிவலிங்கநாயக்கன்பட்டியில் கால்நடை பராமரிப்பு துறை சார்பில் கால்நடைகளுக்கு சிறப்பு தடுப்பூசி முகாம் நடந்தது.

கலெக்டர் வெங்கடாசலம் தலைமை வகித்தார். கறவை மாடுகள் மற்றும் வெள்ளாடுகளுக்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக குடற்புழு நீக்கப்பணி, மலடுநீக்க சிகிச்சை பணி, சினைபரிசோதனை, , ஆண்மை நீக்கம், செயற்கை முறை கருவூட்டல் மற்றும் கண்டுவாத அறுவை சிகிச்சை நடந்தன.

கோழிகளுக்கு கழிச்சல் தடுப்பூசியும், மாத்திரைகளும் வழங்கப்பட்டன.

கால்நடைத்துறை உதவி இயக்குனர் செல்லப்பாண்டி, கால்நடை டாக்டர் விஜயக்குமார் மற்றும் கால்நடை மருத்துவ அலுவலர்கள் பலர் பங்கேற்றனர்.

இணை இயக்குனர் வரதராஜன் கூறுகையில், " மாவட்டத்தில் உத்தமபாளையம் கோட்டத்தில் 52, பெரியகுளம் கோட்டத்தில் 52 என மொத்தம் 104 முகாம்கள் நடத்தப்படவுள்ளன. இம் முகாம்களில் கால்நடை மற்றும் நாட்டுக்கோழி வளர்ப்போர் முன்னெச்சரிக்கையாக தடுப்பூசிகளை போட்டு பயனடையலாம்," என்றார்.

## வாழைத்தார் விலை உயர்வு இலைக்கட்டு வீழ்ச்சி

சிவகங்கை: சிவகங்கை அருகே மலம்பட்டி சந்தையில் வாழைத்தார் விலை உயர்ந்தபோதும், இலைக்கட்டு வீழ்ச்சி அடைந்ததால் விவசாயிகள் கவலை அடைந்தனர்.

மலம்பட்டி, கூட்டுறவுப்பட்டி, இடையமேலுர், நாயத்தான்பட்டி, சிவல்பட்டி, சோனைபட்டி, இடையமேலுர் உள்ளிட்ட பகுதிகளில் 5 ஆயிரம் ஏக்கரில் வாழை சாகுபடி செய்யப்படுகிறது. இங்கு விளையும் வாழைத்தார்கள், இலைக்கட்டுகள் மலம்பட்டி சந்தையில் விற்பனை செய்யப்படுகின்றன. இந்த சந்தை செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் கூடுகிறது. இங்கு 5 ஆயிரம் வாழைத்தார்கள், 3 ஆயிரம் இலைக்கட்டுகள் விற்பனைக்கு வரும்.

திண்டுக்கல், புதுக்கோட்டை, காரைக்குடி, தேவகோட்டை, சிவகங்கை உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த வியாபாரிகள் வாங்கி செல்கின்றனர். நேற்று சந்தையில் 2 ஆயிரம் வாழைத்தார்களே விற்பனைக்கு வந்தன. கோயில் விழாக்கள் நடப்பதால் பழங்கள் தேவை அதிகரித்துள்ளது. இதனால் வாழைத்தார் விலை உயர்ந்தது. பூவன் ரகம் ஒரு வாழைத்தார் ரூ.700 க்கும், ரஸ்தாளி ரூ.550, செவ்வாழை ரூ.500, ஒட்டு ரூ.400, நாடு ரூ.750 க்கும் விற்கப்பட்டன.

இலைக்கட்டு சரிவு:

ஆடி மாதம் என்பதால் திருமணம் போன்ற விசேஷங்கள் இல்லை. இதனால் 2 ஆயிரத்திற்கும் குறைவான இலைக்கட்டுகளே வந்தபோதும் விலையும் சரிந்தன.

இடையமேலுர் விவசாயி கருப்பணன் கூறுகையில், ' ஆடி காற்றில் இலைகள் சேதமடைந்தன. இதனால் குறைவான இலைகளே சந்தைக்கு கொண்டு வந்தோம். ஆனால் தேவை குறைந்ததால் இலைக்கட்டுகளின் விலை சரிந்தது. வாழைத்தார் விலை உயர்வு ஆறுதல் அளிக்கிறது,' என்றார்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### வேளாண் அறிவியல் நிலையத்தில் நிலக்கடலை சாகுபடி பயிற்சி : 8ம் தேதி நடக்கிறது

நாமக்கல்: நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில் வரும், 8ம் தேதி (திங்கட்கிழமை) நிலக்கடலை மற்றும் ஆமணக்கு சாகுபடி தொழில் நுட்பங்கள் என்ற தலைப்பில், ஒருநாள் இலவச பயிற்சி முகாம் நடக்கிறது. இதுகுறித்து, வேளாண் அறிவியல் நிலைய தலைவர் அகிலா வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவித்ததாவது: நாமக்கல் வேளாண் அறிவியல் நிலையத்தில், வரும் 8ம் தேதி (திங்கட்கிழமை) காலை, 9 மணிக்கு ‘நிலக்கடலை மற்றும் ஆமணக்கு சாகுபடி தொழில் நுட்பங்கள்’ என்ற தலைப்பில் ஒரு நாள் இலவச பயிற்சி முகாம் நடக்கிறது.

இப்பயிற்சியில், நிலக்கடலை மற்றும் ஆமணக்கு சாகுபடியின் முக்கியத்துவம், மண் பரிசோதனை, வீரிய ஒட்டு ரகங்கள், விதை நேர்த்தி செய்தல், விதி உற்பத்தி செய்யும் முறைகள் பற்றி விளக்கி கூறப்படுகிறது. பயிர் இடைவெளி, விதைக்கும் முறைகள், உர நிர்வாகம் (நுண்ணூட்ட உரம் மற்றும் உயிர் உரம்), களை நிர்வாகம், பல்வேறு வகையான கலைக்கொல்லிகள் உபயோகப்படுத்தும் வழிமுறைகள் பற்றியும் எடுத்துரைக்கப் படுகிறது.

மேலும், நீர் நீர்வாகம், பயிர் வளர்ச்சி ஊக்கி தெளித்தல், ஒருங்கிணைந்த பூச்சி நோய் நிர்வாகம், அறுவடை பின்சார் தொழில் நுட்பங்கள் மற்றும் கலைக்கொடியை சேமிக்கும் முறைகள், தீவனமாக பயன்படுத்தும் தொழில் நுட்பங்கள் குறித்தும் பயிற்சி அளிக்கப்படும். பங்கேற்க விரும்புவோர் கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் செயல்படும் வேளாண் அறிவியல் நிலையத்தை தொடர்பு கொண்டு வரும் 7ம் தேதிக்குள், தங்களது பெயரை பதிவு செய்து கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## வேளாண் கூட்டுறவு சங்கத்தில் பருத்தி ரூ.50 லட்சத்துக்கு ஏலம்

ராசிபுரம்: நாமக்கல் மாவட்டம், அக்கரைப்பட்டி தொடக்க கூட்டுறவு வங்கி வளாகத்தில் உள்ள, வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் வாரந்தோறும் திங்கட்கிழமை பருத்தி ஏலம் நடைபெறும். நேற்று நடந்த ஏலத்தில் அக்கரைப்பட்டி, மதியம்பட்டி, பொரசல்பட்டி சுற்று வட்டார பகுதிகளை சேர்ந்த விவசாயிகள், 60 கிலோ எடை கொண்ட 2,426 பருத்தி மூட்டைகளை ஏலத்திற்கு கொண்டு வந்திருந்தனர். திருச்செங்கோடு, மகுடஞ்சாவடி, கொங்கணாபுரம், சேலம் ஆகிய ஊர்களிலிருந்து 50க்கும் மேற்பட்ட வியாபாரிகள் கலந்துகொண்டு பருத்தி மூட்டைகளை ஏலத்தில் எடுத்தனர். இதில், சுரபி ரக பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு குறைந்த பட்ச விலையாக ரூ. 5,505க்கும், அதிகபட்சமாக ரூ. 6,179 க்கும் ஏலம் போனது. மொத்தம் ரூ.50 லட்சத்துக்கு பருத்தி ஏலம் நடைபெற்றது.

## விளைச்சல் அதிகரிப்பால் தக்காளி விலை வீழ்ச்சி

தேன்கனிக்கோட்டை: கிருஷ்ணகிரி மாவட்டம் தேன்கனிக்கோட்டை, தளி, அஞ்செட்டி, கெலமங்கலம் சுற்றுவட்டார பகுதியில் நூற்றுக்கணக்காண ஏக்கரில், விவசாயிகள் பரவலாக தக்காளி சாகுபடி செய்துள்ளனர். கடந்த மாதம் 20 கிலோ தக்காளி கூடை ரூ.800 வரை விலை உயர்ந்தது. சில்லரையில் கிலோ ரூ.40வரை விற்பனையானது. விலை உயர்வால் தக்காளி பயிரிட்ட விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர். இந்நிலையில் கடந்த ஒரு மாதமாக தக்காளி விலை படிப்படியாக குறைந்து, 20 கிலோ கூடை ரூ.100ஆக குறைந்துள்ளது. சில்லரையில் ஒரு கிலோ ரூ.5ஆக விற்பனை செய்யப்படுகிறது. மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில், கடந்த ஒரு மாதமாக பரவலாக மழை பெய்து வருவதால், தக்காளி விளைச்சல் அதிகரித்துள்ளது.

## காலி பிளவர் விலை சரிவு

போச்சம்பள்ளி: போச்சம்பள்ளி சுற்றுவட்டார பகுதிகளில் கத்திரி, தக்காளி, முள்ளங்கி, அவரை, வெண்டைக்காய் உள்ளிட்ட பல வகை காய்கறிகள் சாகுபடி செய்யப்படுகின்றன. இவை போச்சம்பள்ளி, மத்தூர், காரிமங்கலம் மார்க்கெட்டுகளுக்கு எடுத்து சென்று விற்பனை செய்யப்படுகிறது. கடந்த வாரம் காலி பிளவர் பூ ஒன்று ரூ.25 முதல் ரூ.30 வரை விற்பனை செய்யப்பட்டது. இந்நிலையில் தர்மபுரி மாவட்டம், மாரண்டஹள்ளி பகுதிகளில் விளைச்சல் அதிகரித்துள்ளது. இதன் காரணமாக காலி பிளவர் விலை குறைந்துள்ளது. போச்சம்பள்ளியில் டெம்போவில் கொண்டு வந்து காலி பிளவர்கள் விற்பனை செய்யப்படுகின்றன. பூ ஒன்று ரூ.10 முதல் ரூ.15 வரை விற்பனை செய்யப்படுகிறது. இதனால் பொதுமக்கள் ஆர்வத்துடன் வாங்கிச் செல்கின்றனர்.

## பசுந்தேயிலை விலை குறைவு

குன்னூர், : நீலகிரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பரவலான மழை பெய்து வருகிறது. இதனால் தேயிலை மகசூலும் அதிகரித்துள்ளது. ஆனால் உற்பத்தி திறன் குறைவாக இருப்பதால் பெரும்பாலான தொழிற்சாலைகளில் கோட்டாமுறை அமல்படுத்தப்பட்டுள்ளது. இருப்பினும் ஏல மையங்களுக்கு வரும் தேயிலை தூளும் வாரந்தோறும் 20 முதல் 25 சதவீதம் வரை விற்பனையாகாமல் தேக்கமடைந்து வருவதால் பசுந்தேயிலைக்கு உண்டான விலையும் சரிந்து வருகிறது. இதனால் பசுந்தேயிலையின் வார விலையும் குறைய துவங்கியுள்ளது. அதன்படி இந்தவாரம் சாதாரண ரக பசுந்தேயிலைக்கு கிலோ ஒன்றுக்கு ரூ.9 முதல் ரூ.10, நடுத்தரத்திற்கு ரூ.13 முதல் ரூ.15, உயர் ரகத்திற்கு ரூ.17 முதல் ரூ.18 வரை விலை வழங்கப்பட்டுள்ளது. இதனால் தேயிலை விவசாயிகள் கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கி தோட்டத்தை பராமரிக்கவும் தொழிலாளர்களுக்கு சம்பளம் கொடுக்க இயலாமலும் பெரும் அவதிக்குள்ளாகி வருகின்றனர்.

## ஆடிப்பெருக்கை முன்னிட்டு திருச்சியில் பூக்கள் விலை 2 மடங்கு உயர்வு

திருச்சி,: ஆடிப்பெருக்கு விழாவையொட்டி திருச்சியில் பூக்கள் விலை 2 மடங்கு உயர்ந்துள்ளது. திருச்சி காந்தி மார்க்கெட், ' ரங்கம் பூமார்க்கெட்டுக்கு வயலூர், சோமரசம் பேட் டை, கோப்பு, குழுமணி, மணப்பாறை, வாத்தலை, குணசீலம், சென்னகரை உள்ளிட்ட பகுதி களில் இருந்து தினமும் 5டன் பூக்கள் விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. இங்கிருந்து திருவாரூர், நாகை, தஞ்சை, விழுப்புரம், விருத்தாசலம் உள்ளிட்ட பகுதிகளுக்கு தினமும் 4 டன் பூக்கள் விற்பனைக்காக அனுப்பப்படுகிறது. கடந்த சில மாதங்களாக பூ விலை ஏற்றமும், இறங்கு முகமாக இருந்து வருகிறது. இந்நிலையில் இன்று ஆடிப்பெருக்கு விழாைவயொட்டி ரங்கம் மற்றும் காந்திமார்க் கெட்டில் பூ விலை நேற்று 2 மடங்கு உயர்ந்தது. கிலோ ரூ.150க்கு விற்ற மல்லிகை பூ ரூ.300க்கும், ரூ.200க்கு விற்ற முல்லை ரூ.400க்கும், ரூ.60க்கு விற்ற விருச்சி ரூ.120க்கும், ரூ.200க்கு விற்ற கனகாம்பரம் ரூ.600க்கும், ரூ.240க்கு விற்ற ஜாதிமல்லி ரூ.400க்கும், ரூ.40க்கு விற்ற சம்மங்கி ரூ.140க்கும், ரூ.80க்கு விற்ற சாமந்தி ரூ.120க்கும், ரூ.80க்கு விற்ற அரளி ரூ.180க்கும், ரூ.80க்கு விற்ற ரெட்ரோஸ் ரூ.180க்கும், ரூ.30க்கு விற்ற கோழிக்கொண்டை ரூ.50க்கும் விற்கப்பட்டு வருகிறது. ஆடிப்பெருக்கு விழாவையொட்டி பழவகைகளில் மாதுளை கிலோ ரூ.140, கொய்யா ரூ.60, ஆப்பிள் ரூ.60, பேரிக்காய் ரூ.60 என விலை உயர்ந்துள்ளது

## திருமங்கலம் பகுதியில் ஆடி பட்ட உழவு பணி தீவிரம்

திருமங்கலம், : ஆடி 18ம் பெருக்கு உழவு பணிகளுக்கு உகந்த நாளாகும். இதையொட்டி கடந்த சில நாட்களாக திருமங்கலம் சுற்றுவட்டார பகுதிகளான நடுக்கோட்டை, நெடுங்குளம், உலகாணி, கரடிக்கல், உரப்பனூர், மைக்குடி, சாத்தங்குடி, அரசபட்டி, சிவரக்கோட்டை, மருதக்குடியில் விவசாயிகள் உழவு பணிகளை துவக்கியுள்ளனர். இதற்காக நெல்விதைகளை விவசாயிகள் அதிகளவில் வாங்கி சென்றுள்ளனர். இதுபோக சோளம் மற்றும் ஊடுபயிர்களான பாசி, துவரம் உள்ளிட்ட பருப்பு வகைகளும் விதைக்க தயாராகி வருகின்றனர்.

இதுதவிர, சமீபத்தில் பெய்த மழையை நம்பி மானவாரி பயிர்கள் விளையும் நிலங்களும் பண்படுத்தும் பணிகளில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

இதுகுறித்து நெடுங்குளத்தினை சேர்ந்த விவசாயி வீரணன் கூறுகையில, ஆடிபட்டம் தேடி விதைத்தால் அறுவடை நன்றாக இருக்கும் என்பதால் நிலங்களை உழுது வருகிறோம். இந்தாண்டு பருவமழை எதிர்பார்த்த அளவு இருந்தால் விவசாயம் செழிக்கும் என்றார்.

## மானாவாரி நிலங்களில் பருத்தி பயிரிட ஆலோசனை

பழநி, : மானாவாரியில் பருத்தி பயிரிட எல்.ஆர்.ஏ-5166, சுமங்கலா, கே-11, எஸ்.வி.பி.ஆர்-2, கே.சி-2 ஆகியவை ஏற்ற ரகங்கள். 45*15 சென்டிமீட்டர் இடைவெளியில் பார்கள் அமைத்து எக்டேருக்கு 15 கிலோ என்ற அளவில் விதைக்க வேண்டும். பஞ்சு நீக்கிய விதையுடன் 3 கிராம் பாலிகோட், கார்பன்டைசிம் 2 கிராம், இமிடர் குளோபரிட் 7 கிராம், சூடா மோனாஸ் ஃப்ளூரசன்ஸ் 10 கிராம், அசோபாஸ் 40 கிராம் கலந்து விதைப்பதால் விதைத்த 45வது நாள்வரை சாறு உறிஞ்சும் பூச்சிகளிலிருந்து பயிரினை காத்து ஆரம்பத்தில் நல்பயிர் வளர்ச்சி அடைய முடியும்.

நுண்ணூட்டச்சத்தாக எக்டேருக்கு சிங்க் சல்பேட் 50 கிலோ அடியுரமாக அளிப்பதால் வேர் அழுகல் நோய் கட்டுப்படுத்தப்படுகிறது. இதனால், விளைச்சல் அதிகரிக்கிறது. பயிரின் வயது 150 நாட்களுக்குள் இருக்கும்பேது, 60 கிலோ தழைச்சத்து இடவேண்டும். 150 நாட்களுக்கு மேல் ஆகும்போது தழைச்சத்து 80 கிலோவிற்கு மேல் இடவேண்டும். வீரிய ஒட்டு ரகங்களுக்கு தழைச்சத்து 120 கிலோ இடவேண்டும். மேற்காணும் உரத்தில் மணிச்சதது முழுவதும் மற்றும் தழைச்சத்து, சாம்பல் சத்தினை பாதி அடியுரமாகவும் இட வேண்டும்.

களை முளைப்பதற்குமுன் ஃப்ளூகுளோரலின் 2.2 லிட்டர் அல்லது பென்டிமெத்தலின் 3.3 லிட்டர் ஆகியவற்றில் ஒன்றினை விதைத்த 3வது நாள் தெளித்து கட்டுப்படுத்த வேண்டும். உயிர் உரமாக 2 ஆயிரம் கிராம் அசோஸ்பரில்லத்துடன் 2 ஆயிரம் கிராம் பாஸ்போ பாக்டீரியா இட வேண்டும். ரசாயன உரங்களாக இருந்தால் மண் பரிசோதனை செய்து மண் வள அட்டை

பெற்ற பின்பு உரமிட வேண்டும். பரிசோதனை செய்யாத நிலங்களுக்கு களை முளைப்பதற்கு முன் ஃப்ளூகுளோராலின் 2.2 லிட்டர், பென்டிமெத்தலின் 3.3 லிட்டர் ஆகியவற்றில் ஒன்றினை விதைத்த 3வது நாள் தெளித்து கட்டுப்படுத்த வேண்டும்.

அடி உரமாக எக்டேருக்கு 50 கிலோ சிங்க் சல்பேட் அளித்தால் நுண்ஊட்ட சத்து அளிக்க வேண்டும். இதுதொடர்பான கூடுதல் விபரங்களுக்கு விவசாயிகள் அந்தந்த பகுதி வேளாண் அலுவலரையோ அல்லது பழநி வட்டார வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்தையோ தொடர்பு கொள்ளலாமென வேளாண்துறையினர் தெரிவித்துள்ளனர்.

**விவசாயிகளுக்கு விண்ணப்பங்கள்**

சிங்கம்புணரி, : சிங்கம்புணரி அருகே எஸ். புதூர் ஒன்றியத்தை சேர்ந்த விவசாயிகளுக்கு தோட்டக்கலை திட்டங்களுக்கான விண்ணப்பங்கள் பெறும் முகாம் நாளை (ஆக.3) நடக்கிறது.இதையொட்டி எஸ்.புதூர் ஒன்றிய அலுவலகத்தில் காலை 10மணி முதல் விண்ணப்பங்கள் பெறப்படுகிறது. சிங்கம்புணரியில் ஆக.4ம் தேதி சிங்கம்புணரி ஒன்றிய அலுவலகத்தில் விண்ணப்பங்கள் பெறப்படுகிறது. இதில் தேசிய தோட்டகலை இயக்கத்திட்டத்தின் கீழ் வீரிய இரக காய்கறி நாற்றுகள், பழமரங்கள், பசுமை குடில்கள், நிழல்வலைள் கூடம் அமைக்கவும், விளக்குபொறி, இனக்கவர்ச்சி பொறி, நிலையான பந்தல், சொட்டுநீர் பாசனம் அமைக்க 50 சதவீத மானியம் வழங்கப்படுகிறது. பயன்பெற விரும்பும் விவசாயிகள் குடும்ப அட்டை நகல், பாஸ்போர்ட் சைஸ் போட்டோ, சிட்டா நகலுடன் விண்ணப்பங்கள் அளிக்கலாம். மேலும் ஆடி பட்ட விதைகளும் கிடைக்கும் என. இத்தகவலை புதூர், சிங்கம்புணரி தோட்டகலை துறை உதவி இயக்குநர்கள் ரேகா, அழகுமலை தெரிவித்துள்ளனர்.